தலைநகரில் குறிப்பிட்ட எண்ணிக்கை வியாபாரிகளையே அனுமதிக்க வேண்டும்

வர்த்தகச் சங்கம் வலியுறுத்தல்



கோலாலம்பூர், ஆக. 20-

தலைநகரிலுள்ள ஒவ்வொரு நாடாளுமன்றத் தொகுதியிலும் குறிப்பிட்ட அளவிலான வியாபாரிகளுக்கு மட்டுமே அனுமதி கொடுக்கும் நடைமுறையை புதிய டத்தோ பண்டாராகப் பொறுப்பேற்றிருக்கும் டத்தோஸ்ரீ டாக்டர் மைமுனா முகமட் ஷாரிஃப் உறுதிப்படுத்த வேண்டும் என மலேசிய வர்த்தகச் சங்கத்தின் சம்மேளனத் தலைவர் டத்தோஸ்ரீ ரோஸ்லி சுலைமான் வலியுறுத்தினார்.

மக்களின் எண்ணிக்கையைவிட அதிகமான வியாபாரிகள் குறிப்பிட்ட ஒரு பகுதியில் இருந்தால் அது பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் அவர் சொன்னார்.

காலையிலும் மாலையிலும் வியாபாரம் செய்யும் வியாபாரிகள் அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை வைத்தே அவர்களின் வாழ்க்கையை நடத்தி வருகின்றனர்.

ஓர் இடத்தில் அதிகமான வியாபாரிகள் இருந்தால் அது அவர்களின் வருமானத்தைப் பாதிக்கும் என நேற்று தலைநகரில் நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் தெரிவித்தார்.

இப்போது அனைவரும் வியாபாரம் செய்வதை நாம் அனுமதிக்க முடியாது. இதற்கு நாம் அனுமதி வழங்கினால் அது ஆரோக்கியமற்ற போட்டியை உருவாக்கி விடும் எனவும் அவர் கூறினார்.

கோலாலம்பூர் மாநகர் மன்ற உறுப்பினர்கள் இதுகுறித்து ஆய்வு ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக் கொண்ட அவர், வியாபாரிகள் அனைவருக்கும் புதிய முறை ஒன்றை கோலாலம்பூர் மாநகர் அறிமுகப்படுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்

உதாரணத்திற்கு புக்கிட் பிந்தாங்கில் அதிகமான வியாபாரிகள் உள்ளனர். புக்கிட் பிந்தாங் பகுதிக்கு வருகை புரியும் மக்களின் எண்ணிக்கையை அடிப்படையாக வைத்து அங்கு வியாபாரிகளின் எண்ணிக்கையை உறுதிப்படுத்த வேண்டும்.

காரணம் அங்கு அதிகமான வியாபாரிகள் இருக்கக்கூடாது. அது வியாபாரிகளின் வருமானத்தைப் பெரிதும் பாதிக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே கோலாலம்பூரில் அதிகரித்து வரும் அந்நிய நாட்டு வியாபாரிகளைக் குறைப்பதற்கான நடவடிக்கையில் டாக்டர் மைமுனா இறங்க வேண்டும் என கூட்டரசுப் பிரதேச பூமிபுத்ரா வர்த்தகச் சங்கத் தலைவருமான அவர் கேட்டுக் கொண்டார்.

தலைநகரில் உள்ள மலாய், சீன, இந்திய வியாபாரிகளுக்கு நாள் ஒன்றுக்கு 100 ரிங்கிட் கூட வருமானமாகக் கிடைப்பதில்லை என்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

கோவிட்-19 தொற்றுக்கு முன்பு அவர்கள் நாள் ஒன்றுக்கு 100 ரிங்கிட்டை வருமானமாகப் பெற்று வந்தனர்.

இதன்மூலம் மாதம் ஒன்றுக்கு அவர்களுக்கு 3 ஆயிரம் ரிங்கிட் வருமானம் கிடைக்கும். ஆனால் அந்த நிலை இப்போது இல்லை என அவர் குறிப்பிட்டார்.